அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றுகிறார்!

# சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கல்வி உதவித்தொகை - நல உதவிகள்!

## தயாநிதி மாறன் எம்.பி.- எம்.கே.மோகன் - நா.எழிலன் பங்கேற்பு! நே.சிற்றரசு அறிக்கை!

சென்னை, அக்.15 -

மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு விடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு :-

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 1000 நபர்களுக்கு கல்வி உதவித் தொகை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (15.10.2023 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணியளவில் அண்ணாநகர், கிரசன்ட் மைதானத்தில் நடைபெறுகிறது.



கல்வி உதவித்தொகை மற்றும் நலத்திட்ட உதவிகள் இளைஞர்களின் எழுச்சி நாயகன் கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், மருத்துவர் நா.எழிலன், பகுதி கழகச் செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக் குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் உதவித்தொகை பெறும் பயனாளிகளின் குடும்பத்தினர்கள் கலந்து கொள்கின்றனர்.

இவ்விழாவிற்கு கழக நிர்வாகிகள் அனைவரையும் கலந்துகொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

விழாவின் இறுதியில் 102வது வட்டக்கழக செயலாளர் பி.சந்திரசேகரன், 102அ வட்டக்கழக செயலாளர் எம்.ஜி.ரவிக்குமார் மற்றும் 102வது மாமன்ற உறுப்பினர் கே.ராணி ரவிச்சந்திரன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு கேட்டுக் கொண்டுள்ளார்.



பாராளுமன்ற தகவல் தொழில்நுட்ப நிலைக்குழு ஜார்க்கண்ட் தலைநகர் ராஞ்சியில் உள்ள ஜார்க்கண்ட் மாநில சட்டசபையில் தகவல் மற்றும் தகவல் தொழில்நுட்ப மேலாண்மை செயல்படுவது மற்றும் அரசு துறைகள், வங்கிகளில் செயல்படும் விதம் குறித்து ஆய்வை நிலைக்குழு தலைவரும் ஆம் ஆத்மி கட்சியின் முன்னணி தலைவருமான நாராயண தாஸ் குப்தா தலைமையில், கழக மாநிலங்களவை உறுப்பினர் இரா.கிரிராஜன் உள்ளிட்ட பாராளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள் ஜார்க்கண்ட் மாநில சட்டமன்ற செயலாளர், மாநில தகவல் தொழில்நுட்ப துறை அதிகாரிகள்,மற்றும் பல்வேறு வங்கிகளின் உயர் அதிகாரிகளுடனான கலந்தாய்வு செய்து, ஜார்க்கண்ட் மாநில சட்ட சபையை பார்வையிட்டு சபாநாயகர் ரபீந்திரநாத் மகாதூ அவர்களை நேரில் சந்தித்தும் கலந்துரையாடினர்.

நந்தனம் மதி,எஸ்.முரளி முன்னிலை! த. சீனிவாசன் (எ) கேபிள் சீனு தலைமையில்

# வர்த்தக அணி சார்பில் கழக கொடி ஏற்றி, கல்வெட்டு திறப்பு !உணவு வழங்கல்!

## மயிலை த.வேலு,அன்பகம் கலை,காசி முத்துமாணிக்கம் பங்கேற்பு !

சென்னை அக்:15

சென்னை தென் மேற்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக கொடி ஏற்றி, கல்வெட்டு திறப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்கும் விழா இன்று ( 15.10.2023 ஞாயிற்றுக்கிழமை) மதியம் 12 மணி அளவில் ஆலயம்மன் கோவில் தெரு தேனாம்பேட்டையில் நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு தென்மேற்கு மாவட்ட வர்த்தக அணி தலைவர் த.சீனிவாசன் என்கிற கேபிள் சீனு தலைமை ஏற்கிறார்.

பகுதிச் செயலாளர்கள் நந்தனம் கி.மதி எம். சி,எஸ். முரளி, வட்டச் செயலாளர் சார் எஸ். ஆர்.ராஜா சுரேஷ் குமார்,மயிலை மேற்கு பகுதி அவைத் தலைவர் ஜி.ஆர். இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

க.மதியழகன்,லயன் சி. எஸ்.நந்தகுமார்,ஆர். கோவிந்தராஜன்,மாயா என்கிற முருகராஜா,ஸ்ரீ கணேஷ், வெ. கனிமொழி, கோ.சு.கருணாநிதி,ஏ.பாஸ்கர், பி.சக்திவேல், எஸ்.மீனா ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ,தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, கழக வர்த்தக அணி செயலாளர் காசி முத்து மாணிக்கம் ஆகியோர் பங்கேற்று கழக கொடி ஏற்றி, கல்வெட்டு திறந்து வைத்து பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்குகின்றனர்.

இதில் முன்னாள் பொதுக் குழு உறுப்பினர் ஆ.ஜெயராமன்,மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மயிலை ஆர். பாலு, மாவட்ட பிரதிநிதி வீ. செங்குட்டுவன், வட்ட அவைத் தலைவர் இ.கே. மதி, மாவட்ட பிரதிநிதி வேன் சிவா, வட்டத் துணைச் செயலாளர் எ.அலமேலு உள்ளிட்ட கழகத்தினர் கழக முன்னோடிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

தி. லோகேஸ்வரன், ஜி. தணிகாசலம்,இ. தணிகாசலம் ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

தா.வ.மு.கஜேந்திரன் நிகழ்ச்சி ஏற்பாடு !

# 39(அ) வட்டத்தில் எம்.பாஸ்கர் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி!

## டி.கே.எஸ்.இளங்கோவன், தா.இளையஅருணா, ஜே.ஜே.எபினேசர் பங்கேற்பு!

சென்னை அக்:15

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி முன்னாள் பகுதி பிரதிநிதி முன்னாள் வட்டப் பொறுப்புக்குழு உறுப்பினர் எம்.பாஸ்கர் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலியை முன்னிட்டு ஏழை எளியோருக்கு உணவு வழங்குதல் நிகழ்ச்சி இன்று (15.10.2023 ஞாயிற்றுக்கிழமை) பகல் 12.00 மணியளவில் வெங்கடேசன் அலி தெருவில் வட்டச் செயலாளர் தா.வ.மு. கஜேந்திரன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

இதில் கழக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ். இளங்கோவன்,மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ ஆகியோர் உணவு வழங்குகிறார்கள்.

இதில் இரா.மதிவாணன், ந.மனோகரன், இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், கு.நற்குணம், ஆர். வெற்றிவீரன், வெ.சு.சத்திய நாராயணன், இர.பொன்இளவரசன், கட்பீஸ்.ப.சோம சுந்தரமூர்த்தி, எஸ்.பி.எஸ்.புத்தன், சதிஷ், என்.மருதுகணேஷ், பி.எஸ்.எஸ்.தனுஷ்கோடி, ஜெ.சுரேஷ்பாபு, எஸ்.சேகர், எஸ்.எம்.டி.ரவிச்சந்திரன், பி.நரேஷ்குமார், என். அனிபா, கே.பாலு, ஆர்.டி. ராஜா, எம்.வேதலட்சுமி, கே.பி.சதிஷ்குமார், வி.முத்து, க.ராஜேஸ்வரி,கே.தேவி எம். சி, என்.எம்.கதிரேசன், ந. கோதண்டன், ம.நாகராஜன், சி.மணிகண்டன், ப.குமார், எஸ்.தமிழ்செல்வன், பொ.து. ராஜா, வீ.வடிவேலு, கே. அடைக்கலம், எ.டில்லி ராஜன், கே.சரவணன், பி. அனிதா, ஆர்.ரங்கநாதன், எஸ்.சுரேஷ்குமார், ஆர். அருள், ஏ.எம்.இளங்கோவன், தமிழ்சிவா, எஸ்.வேலாயுதம், பாப்பா வி.என்.ஆறுமுகம், ஆர்.அருண்மொழி, கே. நவீன், எம்.சதிஷ்குமார், எஸ். சதிஷ்குமார்,

டி.செந்தில், பி.மாசிலாமணி, படக்கடை ஆர்.செல்வம், ஜி.துரைசாமி, ஆர். ஜெ.ரமேஷ், எம்,முருகன், எச்.ஷேக், டி.ரமேஷ், பி.கிருபாகரன், கே.முத்து மாலை, ஜி.கில்பர்ட், பி.பார்த்திபன், ஆர்.ஜெ. ரமேஷ், ஜி.துரைசாமி,கே.சேகர், எஸ்.மணிமாறன், கேப்டன்.சங்கர், எஸ். தாமரைச்செல்வி,

என்.இலக்கியா, எம். மலர்கொடி, என்.மலர்விழி, எஸ்,அன்னக்கிளி, டி.ஜெயா, எ.பரமேஸ்வரி, ஏ.சாந்தி, ஆர்.ரமேஷ், ஒற்றைவாடை ஆர்.வெங்கட், எம்.சுரேஷ்குமார், து. ஆனந்த், இ.ஆறுமுகம் மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

இரண்டாம் கட்டமாக இஸ்ரேல் நாட்டில் சிக்கித்தவித்த

# 28 தமிழர்கள் பத்திரமாக தாயகம் திரும்பினர்!

## சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்!

சென்னை, அக்.15

இஸ்ரேல் பாலஸ்தீனம் நாடுகளுக்கு இடையேயான போர் தற்போது தீவிரமடைந்த நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கினங்க தமிழ்நாடு அரசின் சார்பில் அறிவிக்கப்பட்ட உதவி எண்கள் மூலம் அங்கு சிக்கித் தவித்த 128 தமிழர்களின் தகவல்கள் அறியப்பட்டது. இவர்களில் நேற்று 13.10.2023 அன்று முதற்கட்டமாக புதுடெல்லி வந்த 21 தமிழர்கள் அவர்களது இல்லம் வரை, தமிழ்நாடு அரசின் சார்பில் அழைத்து வரப்பட்டனர்.

இந்நிலையில் இரண்டாம் கட்டமாக நேற்று (14.10.2023) மதுரை, திண்டுக்கல், கரூர், தென்காசி, தர்மபுரி, திருப்பூர், திருவண்ணாமலை, திருச்சி, சென்னை, விழுப்புரம், திருப்பத்தூர், சேலம், கோயம்பத்தூர் முதலிய மாவட்டங்களைச் சேர்ந்த 28 தமிழர்கள் இஸ்ரேலில் இருந்து சிறப்பு விமானத்தில் நேற்று காலை 06.00 மணிக்கு புதுடெல்லி வந்தடைந்தனர்.

புது டெல்லி விமான நிலையத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் அவர்களை வரவேற்று அவர்களுக்கு காலை உணவு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தமிழ்நாடு அரசு செலவில் விமான பயண சீட்டுகளும் ஏற்பாடு செய்யப்பட்டது. இவர்களில் 16 தமிழர்கள் சென்னை விமான நிலையத்திற்கும், 12 தமிழர்கள் கோயம்பத்தூர் விமான நிலையத்திற்கும் வந்தடைந்தனர். மேலும் அரசின் தரப்பில் அவர்கள் சொந்த மாவட்டங்கள் செல்ல வாகனங்களும் ஏற்பாடு செய்யப்பட்டது.

சென்னை விமான நிலையத்திற்கு வந்தடைந்த 16 தமிழர்களை தமிழ்நாடு அரசின் சார்பில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே. எஸ். மஸ்தான் அவர்கள், அயலகத் தமிழர் நலத் துறை ஆணையர் திருமதி. ஜெசிந்தா லாசரஸ் மற்றும் துறை அலுவலர்கள் வரவேற்று, அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தனர்.

கோயம்பத்தூர் விமான நிலையம் வந்தடைந்த 12 தமிழர்களையும், கோயம்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் வரவேற்று அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தார்.

இதுவரை, இந்நேர்வில் இஸ்ரேலில் இருந்து 49 தமிழர்கள் ஆபரேஷன் அஜய் மற்றும் தமிழ்நாடு அரசின் சார்பிலும், 12 தமிழர்கள் தங்கள் சொந்த செலவிலும் தமிழ்நாடு வந்தடைந்துள்ளனர்.

